## திருநெல்வேலி மாநகராட்சி

## 2020ம் ஆண்டு ஜுன் மாதம் 8ம் நாள் திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

1) திருநெல்வேலி மாநகராட்சியில் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றியதில் அதிகமான சாலை உடைப்புகள் ஏற்பட்டமையாலும் மற்றும் மழையினால் சாலைகள் மிகவும் சேதமடைந்தமையாலும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி, 30 எண்ணம் பழுதடைந்த தார்ச்சாலைகளை21.398 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.1500.08 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்து கொள்வதற்கு தமிழ்நாடு நகர்ப்புற உறுதி செய்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP - Tamil Nadu Sustainable Urban Development Project) சாலைகளைமேம்படுத்துவதற்குபழுதடைந்த தார்ச்சாலைகளை சீரமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகைக்கு மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அதனை நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தமிழ்நாடு நகர்ப்புற உறுதி செய்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP- Tamil Nadu Sustainable Urban Development Project) -ன் கீழ், மேற்கொள்ளப்பட உள்ள சாலைப் பணிகளின் விபரம் பின்வருமாறு:-

| சிப்பம் எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | (1) வார்டு எண்.48 சாஸ்திரிநகரில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(2) வார்டு எண்.49 கோமதிநகர் பகுதி 1-ல் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(3) வார்டு எண்.49 கோமதிநகர் பகுதி 2-ல் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(4) வார்டு எண்.48 சீனிவாசகநகரில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(5) வார்டு எண்.48 திருமங்கைநகர் 1 முதல் 5 தெருக்களில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(6) வார்டு எண்.50 அண்ணாமலைநகர், அண்ணாமலைநகர் விரிவாக்கம் மற்றும் காந்திமதிநகரில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(7) வார்டு எண்.12 கிருபாநகரில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(8) வார்டு எண்.13 முப்பிடாதியம்மன் கீழத் தெருவில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(9) வார்டு எண்.16 அம்பேத்கார்நகரில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(10) வார்டு எண்.16 சாந்திநகர் 23 வது தெரு மற்றும் 28வது குறுக்கு தெருவில் தார்த்தளம் புதுப்பீத்தல்.<br>(11) வார்டு எண்.21 நம்பர் 2 பஸ் ரூட் சாலையில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(12) வார்டு எண்.22 பழைய போலீஸ் ஆஸ்பத்திரி சாலையில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(13) வார்டு எண்.22 சிவன் கீழ ரத வீதியில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(14) வார்டு எண்.22சிவன் வடக்கு ரத வீதியில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(15) வார்டு எண்.24 மேடை போலீஸ் ஸ்டேசன் சாலையில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(16) பாளை மண்டல அலுவலகத்திற்கு செல்லும் அணுகு சாலையில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(17) வார்டு எண்.24 பிரசன்ன விநாயகர் கோவில் தெருவில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(18) இராமையன்பட்டி நுண்உரக்கிடங்கிற்கு செல்லும் சாலையில் | 713.00 |

| | | |
|---|---|---|
| | தார்த்தளம் புதுப்பித்தல் | |
| 2 | (1)வார்டு எண்.1 சிதம்பரம்நகர் வடக்கு விரிவாக்க பகுதிகளில் உள்ள குறுக்குத் தெருக்களில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(2) வார்டு எண்.1 கோகுல்நகரில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(3) வார்டு எண்.1 சிதம்பரம்நகர் தெற்கு விரிவாக்கப் பகுதிகளில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(4) வார்டு எண்.1 நல்மேய்ப்பர்நகர் பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(5) வார்டு எண்.1 தாமரை நகர் பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல்<br>(6) வார்டு எண்.1 செல்வ விக்னேஷ்நகர் பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(7) வார்டு எண்.1 சிதம்பரம்நகர் வடக்கு மெயின் சாலையில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(8) வார்டு எண்.1 கிருஷ்ணாநகர் கடைசி குறுக்குத் தெருக்களில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(9) வார்டு எண்.2 கரையிருப்பு (ஆர்.எஸ்.ஏ.நகர்) பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(10) வார்டு எண்.33 ஞானியாரப்பாநகர் பகுதியில் உள்ள தெருக்களில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(11) வார்டு எண்.36 கொத்துபா பள்ளிவாசல் தெற்கு & வடக்கு மேலத் தெரு மற்றும் பசீரப்பா தெருக்களில் தார்த்தளம் புதுப்பித்தல்.<br>(12) வார்டு எண்.38 குட்டி மூப்பன் தெரு மற்றும் சமாயனா ஷேக் மூப்பன் தெருக்களில் தார்த்தளம் புதுப்பித்தல் | 787.08 |
| | மொத்தம் | 1500.08 |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பழுதடைந்த தார்ச்சாலைகளை, தமிழ்நாடு நகர்ப்புற உறுதி செய்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP- Tamil Nadu Sustainable Urban Development Project) சாலைகளை மேம்படுத்துவதற்கு ரூ.1500.08 இலட்சம் மதிப்பீட்டில், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளின்படி அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1500.08 இலட்சம் மதிபபீட்டில் சிப்பங்கள் முறையில் நிறைவேற்றி கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, திருநெல்வேலி மாநகராட்சியில் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றியதில் அதிகமான சாலை உடைப்புகள் ஏற்பட்டமையாலும் மற்றும் மழையினால் சாலைகள் மிகவும் சேதமடைந்தமையாலும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உறுதி செய்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP- Tamil Nadu Sustainable Urban Development Project) பழுதடைந்த தார்ச்சாலைகளை21.398 கிலோ மீட்டர் நீளத்திற்கு செப்பனிடுவதற்குரூ.1500.08 இலட்சம்மதிப்பீட்டில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளின்படி சிப்பங்கள் முறையில் நிறைவேற்றி கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்கு அனுமதிக்கப்பட்ட தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 52:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.
(ந.க.எண் இ1/2716/2020)

2) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் பணிக்காக திருமதி.ஆசியாபீவி குத்தகைதாரரால் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | பணி விபரம் | தொகை | வைப்புத் தொகை பதிவேடு பதிவு விபரம் |
|---|---|---|---|
| 1 | மாடறுப்பு மனைக்கான உரிமம் (2016-19) முன்வைப்புத் தொகை ரூ.72000/-ல் 60% தொகை மட்டும் | ரூ.43200/- | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு பக்க எண் 40 (2015-16) |
| | மொத்தம் | ரூ.43,200/- | |

மேற்கண்டவாறு செலுத்திய முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்காணும் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கும் அதிகமாக உள்ளதால், நகராட்சி நிர்வாக நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.43,200/-ஐ திருமதி.ஆசியாபீவி குத்தகைதாரருக்கு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்டுள்ளபடி திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட மாடறுப்பு மனைக்கான குத்தகை வகைக்காக செலுத்திய வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கும் அதிகமாக உள்ளதால், நகராட்சி நிர்வாக நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.43200/-ஐ திருமதி.ஆசியாபீவி குத்தகைதாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 53:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

3) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்தில் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள பட்டியலில் 5% காப்புத் தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 5% காப்பு வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்ததாரர் திருமதி.D.மெர்சிமேரி அவர்களால் 06.01.2020-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியிடன் விபரம் | 5% RM தொகை | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | BT Surface at Sivan South Madaveethi Street W.No.22 | 1,04,880 | Lapsed 2015-16 P.No.12 |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள 5% காப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)ன்படி தொகை ரூ.1,04,880/- மட்டும் ஒப்பந்ததாரர் திருமதி.D.மெர்சிமேரி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 54:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, மைய அலுவலகத்தில், பொதுமக்கள் சேவை மையம் (Call centre) 01.12.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மையத்தில் திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சியின் சேவைகள் தொடர்பான புகார்கள்

1800 425 4656 என்ற Toll free எண் மூலம் பெறப்பட்டு கணினியில் பதிவு செய்யப்பட்டு நான்கு மண்டல அலுவலகங்களுக்கும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு (குடிநீர், பொதுசுகாதாரம், தெருவிளக்குகள் மற்றும் மாநகராட்சி சேவை தொடர்பான இதர புகார்கள்) அனுப்பப்பட்டு மேற்படி புகார்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் பெறப்பட்ட பின்னர் இப்புகார் குறித்த கோப்பு முடிக்கப்படுகிறது. மேலும் புகார் நிவர்த்தி செய்யப்பட்ட விபரத்தினை சம்பந்தப்பட்ட புகார்தாரருக்கு தெரிவித்து புகார்தாரர்கள் தெரிவிக்கும் பதிலின் அடிப்படையில் கணினியில் மேற்கண்ட புகார்கள் முடிவு செய்யப்படுகிறது.

1. புகார் செய்தவுடன் புகார் அளித்தவருக்கும் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலருக்கும் SMS அனுப்பும் வசதி
2. புகாரை ComplaintID மூலம் Open செய்து புகாரின் தற்போதைய நிலை (status) அறிந்து கொள்ளும் வசதி
3. புகார் செய்தவரின் அலைபேசி எண்ணைக் கொண்டு அவர் கொடுத்த புகார் அனைத்தையும் பார்க்கும் வசதி
4. மண்டலம் வாரியாக, வார்டு வாரியாக, இனங்கள் வாரியாக அலுவலர்கள் வாரியாக Excel format-ல் PDF-ல் அறிக்கை எடுக்கும் வசதி ஆகியவையும் உள்ளன.

இப்பணி மாமன்றத் தீர்மானம் எண் 23, நாள் 30.7.2019-ன்படி 01.06.2019 முதல் 31.05.2020 வரையுள்ள ஓராண்டு காலத்திற்கு அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி நிறுவனத்துடன் ரூ.6,53,400/- மற்றும் 18% சேவை வரி என்ற தொகைக்கு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஓராண்டு ஒப்பந்தக்காலம் 31.05.2020 உடன் முடிவடையும் நிலையில் மேற்குறிப்பிட்ட பணியினை 01.06.2020 முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ள M/s அண்ணா பல்கலை கழகத்தின் 06.05.2020-ம் தேதிய கடிதத்தின் மூலம் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி,01.06.2020 முதல் 31.05.2021 வரை மேலும் ஓராண்டு காலத்திற்கு தற்போதுள்ள அதே ஆண்டுக் கட்டணம் ரூ.6,53,400/- (மற்றும் 18% சேவை வரி) தொகைக்கு M/s அண்ணா பல்கலைக் கழக நிறுவனம் மூலம் 01.06.2020 முதல் 31.05.2021 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தம் (Acceptance letter) நீட்டித்து வழங்கிட மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும்

அலுவலகக் குறிப்பு

மேற்படி Toll free சேவை மூலம், பொதுமக்கள் மாநகராட்சி தொடர்பான தங்களுக்கான குறைபாடுகளை தொலைபேசி மூலம் அவ்வப்போது இலவசமாக பதிவு செய்து குறைபாடுகள் நிவர்த்தி செய்யப் பெறுவதால் மேற்படி சேவையை தொடரவும், இப்பணியினை M/s அண்ணா பல்கலைக் கழக நிறுவனத்திற்கு 01.06.2020 முதல் 31.05.2021 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஆண்டுக் கட்டணம் ரூ.6,53,400/- (மற்றும் 18% சேவை வரி) தொகைக்கு ஒப்பந்தத்திற்கு வழங்கவும் மாமன்றம் முடிவு செய்யலாம். அவசர அவசியத்தை முன்னிட்டு தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மாமன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

தீர்மானம் எண் 55:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இடிபி/ 10452/ 2008)

---

5)திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் முன்னாள் இராணுவத்தினர் கழகம் மூலம் நியமிக்கப்பட்டு ஒப்பந்த பணியாளர்கள் பேருந்து நிலைய பாதுகாப்புபணி, பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணி, பேருந்து நிலையத்தில் வாகன காப்பகத்தில் வசூல் செய்யும் பணி, ஆம்னி பேருந்து நிலையத்தில் வசூல் செய்யும்பணி, மற்றும் சிறுநீர் கழித்தல் புகை பிடித்தல் அபராதம் வசூல் செய்யும் பணி ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் பணிபுரிந்து வரும் முன்னாள் இராணுவத்தினர் 25 பணியாளர்கள் மாமன்ற தீர்மானம் எண்6,நாள் 07-06-2019 -இன் படி 01-04-2019 முதல் 31-03-2020 வரை பணியில் அமர்த்திக்கொள்ளவும், ஆம்னி பேருந்து நிலையத்தில் 3 பணியாளர்களுக்கு மாமன்ற தீர்மானம் எண்81, நாள் 30-10-2019 -இன் படி 01-08-2019 முதல் 31-07-2020 வரை பணியில் அமர்த்திக்கொள்ளவும், மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி 28 டெக்ஸ்கோ பணியாளர்கள் கீழ்க்கண்டுள்ளவாறு பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியாளர் எண்ணிக்கை | மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|
| 1 | தலைமை காவலர் | 1 | 19402/- |
| 2 | பாதுகாவலர் | 18 | 16639/- |
| 3 | பாதுகாவலர் வாகன காப்பகம் | 3 | 16639/- |
| 4 | இளநிலை உதவியாளர் நிலையில் முன்னாள் இராணுவத்தினர் | 3 | 19402/- |
| 5 | பாதுகாவலர் ஆம்னி பேருந்து நிலையம் | 3 | 16639/- |

1-04-2019 முதல் அகவிலைப்படி உயர்வுசெய்து வழங்குவதற்குகீழ்க்கண்டவாறு ஊதியம் வழங்கக்கோரியுள்ள தமிழ்நாடு முன்னாள் இராணுவ கழக பொது மேலாளர் கடிதம் TEXCO -/TNMW/RevisedVDA 2019 Dated 15-04-2019 மாமன்ற அனுமதிக்கு

மேற்படி நிறுவனத்தாருடன் செய்துகொண்ட ஒப்பந்தம் (Agreement) 31-03-2020 உடன் முடிவடைகின்றது. பேருந்து நிலைய அவசியம் கருதி 01-04-2020 முதல் 31-03-2021 முடிய மேலும் ஒரு வருட காலத்திற்கு முன்னாள் இராணுவத்தினர் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு பணியாளர்கள் (Security Grard) 28 நபர்களையும் பணியாற்ற அனுமதித்தும் மாத ஊதியம் 19402/- தலைமை காவலர்-1 மற்றும் பாது காவலர் மற்றும் இளநிலைஉதவியாளர் நிலையில்- 27 நபர்களை பணியாற்ற அனுமதித்தும் மாத ஊதியம் 16639/- மற்றும் 12% சேவைகட்டணமும், 18% சேவை வரி, (CGST 9% + SGST 9%) எனும் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட 28 பணியாளர்களுக்கான ஊதிய செலவுகளுக்கும் மாமன்ற அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்கு உட்பட்ட பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர்.பேருந்து நிலையத்தில் (புதிய பேருந்து நிலையம்) பேருந்து நிலைய பாதுகாப்பு பணி, கடை வாடகை வசூல் செய்யும் பணி, பேருந்து நிலைய நுழைவு கட்டண வசூல் செய்யும் பணி மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் வாகன காப்பகத்தில் வசூல் செய்யும் பணி மேற்கொண்டுவரும் முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகம் மூலம் பொருளில் கண்ட விபரப்படி உள்ள 25 பணியாளர்களுக்கு ஆம்னி பேருந்து நிலையத்தில் பணிபுரிந்து வரும் 3 பணியாளர்களுக்கும் ஆக மொத்தம் ஒப்பந்த அடிப்படையில்01.04.2020 முதல் 31.03.2021 வரையுள்ள காலத்திற்கு பணியில் அமர்த்திக்கொள்ளவும் இம்மண்டல உதவி வருவாய் அலுவலர் குறிப்பின்படி, 01-04-2019 முதல் 31-03-2020 வரை அகவிலைப்படி நிலுவைத்தொகை வழங்கவும்,அதற்கான செலவினங்களுக்கும், அவ்வப்போது ஏற்படும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 56:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(கோப்பு எண்: சி1-1903-2003 மே.பா.)

---

6) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் முன்வைப்பு/பின்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி வைப்புத் தொகையினை

திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்ததாரர் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களால் 15.05.2020-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of work | EMD/FSD | Register details |
|---|---|---|---|
| 1 | KfW Package I | 4,17,500 | Lapsed 2015-16 P.No.30 |
| 2 | KfW Package I | 3,49,957 | 2016-17/I/P.No.34 |
| 3 | KfW Package II | 4,39,000 | Lapsed 2015-16 P.No.30 |
| 4 | KfW Package II | 3,90,230 | 2016-17/I/P.No.34 |
| 5 | TURIF Package II | 1,07,300 | 2016-17/I/P.No.30 |
| 6 | TURIF Package iI | 1,06,335 | 2016-17/I/P.No.36 |
| 7 | Construction of drain at Senthimangalam in Ward.No.4 | 35,000 | 2016-17/I/P.No.41 |
| | Total | 18,45,322 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி தொகை ரூ.18,45,322/- மட்டும் ஒப்பந்ததாரர் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 57:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

7) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் முன்வைப்பு/பின்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்ததாரர் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களால் 15.05.2020-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of work | EMD/FSD Rs. | Register details |
|---|---|---|---|
| 1 | KfW Package 7 | 3,49,957 | 2016-17/I/P.No.34 |
| 2 | KfW Package 7 | 2,08,304 | 2016-17/I/P.No.35 |
| 3 | KfW Package 8 | 3,90,230 | 2016-17/I/P.No.34 |
| 4 | KfW Package 8 | 2,79,935 | 2016-17/I/P.No.35 |
| | Total | 12,28,426 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்டவிபரப்படி உள்ள வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி தொகை ரூ.12,28,426/- மட்டும் ஒப்பந்ததாரர் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 58:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

8) இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள 4 மண்டல அலுவலகங்கள், சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சுயஉதவிக் குழுக்கள் மூலம் 645 நபர்கள் மாமன்ற தீர்மானம் எண் 112, நாள்

29.10.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாமன்ற தீர்மான எண் 156, நாள் 30.03.2020ன்படி மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 23.06.2020 தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி பணியாளர்களின் பணியின் அவசியத்தை முன்னிட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி 40 சுய உதவிகுழுக்கள் மூலம் பணிபுரிந்து வரும் 645 நபர்களை 26.06.2020 முதல் மேலும் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரிய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

| வ. எண் | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர் களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் மற்றும் வார்டு/ |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிகுழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீஜெயம் சுகாதார பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ போராட்சிஅம்மன் ஆண்கள்குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஸ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஸ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடகத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ. அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | ஸ்ரீசெல்வ விநாயகர் சுகாதாரப்பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 16 | ஸ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 18 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக் குழு | 18 | பாளை மண்டலம் |
| 20 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 21 | தளபதி ஒண்டிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 22 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 23 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 24 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 25 | ஸ்ரீ அன்னை தெரசாசுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 26 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 27 | மங்களஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | பாரதி ஆண்கள் சுய உதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| 31 | செந்தமிழ் மகளீர் சுய உதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப்பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 34 | செம்மொழி சுய உதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 37 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 38 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப்பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமையன்பட்டி உரகிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| | மொத்தம் | 645 | |

ஆ) மேலும்திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும், மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலச்சங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 01.01.2018 முதல் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுய உதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுய உதவிக்குழுவும், பாளையங்கோட்டை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக் குழுவும் மேலப்பாளையம் மண்டலத்திற்கு 17 நபர்கள் மற்றும் 16 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற தீர்மான எண் 13, நாள் 28.03.2018-ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுய உதவிக்குழுக்கள் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண் 156, நாள் 30.03.2020ன் பிரகாரம் 17.06.2020 உடன் முடிவடைவதால் மேலும் 20.06.2020 முதல் 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 ஐ பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 359/- என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண் 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி3) துறை, நாள்04.05.98ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,25,00,000/- ஆகும். சுய உதவிக் குழுக்களைபணியில் ஈடுபடுத்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.78,29,790 ஆகும்.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 45 சுய உதவிக் குழுக்களை நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.359/- என மாவட்ட ஆட்சித் தலைவரின் செ.மு. ஆணை ந.க.எண்ஆ3/16361/2019, நாள் 02.07.2019 ன்படி தின ஊதியம் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண். 156 நாள்: 30.03.2020 ன்படி முறையே அனுமதி காலம் 28.03.2020 முதல் 23.06.2020 முடிய மற்றும் 22.03.2020 முதல் 17.06.2020 உடன் முடியவுள்ள நிலையில் அ)வில் குறிப்பிட்டுள்ள 645 பணியாளர்களுக்கு 26.06.2020 முதல் மேலும் 88 நாட்களுக்கும் ஆ)வில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு 20.06.2020 முதல் மேலும் 88 நாட்களுக்கும் மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தியமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 59:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

(H2/7560/2017)

---

9) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலப் பகுதியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் வார்டு 41-ல் திருநெல்வேலி டவுண் சுபாஸ் சந்திரபோஸ் தினசரி மார்க்கெட்டில் பழைய கட்டிடத்தை முழுவதுமாக இடித்து அப்புறப்படுத்திவிட்டு அதே இடத்தில் புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய மார்க்கெட் கட்டிடம் கட்டுவத்றகு ரூ.10.97 கோடிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி எண் 14595/2018-IHSDP/3.7, நாள் 09.08.2018-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேற்படி மார்க்கெட் கட்டிடத்தில் ஏற்கனவே இருந்த கடைகளில் இருந்த மின்இணைப்புகள் அனைத்தும் மாநகராட்சி வேண்டுகோளுக்கிணங்க மின்வாரியத்தினரால் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் மாநகராட்சியின் பராமரிப்பில் ஒரு பொது கழிப்பிடம் ஒன்றும், மெயின் மற்றும் பிளாக் கடைகள் 87, மாடி கடை 1, காந்தல் அறைகள் 10 மற்றும் திறந்த வெளி கடைகள் 252-ம் உள்ளன. அவைகள் அனைத்தையும் புதிய மார்க்கெட் கட்டிடம் கட்டுவதற்காக இடித்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பழைய கட்டிடத்தின் பகுதிகளை இடித்து அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கான மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது

அலுவலகக் குறிப்பு

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் நேதாஜி போஸ் மார்க்கெட் கட்டிடம் நவீன வசதிகளுடன் புதிதாக கட்டப்பட உள்ளதால், மேற்படி நேதாஜி போஸ் தினசரி மார்க்கெட்டில் மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள பொது கழிப்பிடம் ஒன்றும் மற்றும் கடைகளும் உள்ளன. அவைகள் அனைத்தையும் இடித்து அந்த இடத்திலிருந்து முழுமையாக அப்புறப்படுத்துவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 60:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

10) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு 270 எண்ணம் மின்கலம் மூலம் இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நான்கு மண்டலங்களிலும் பொது சுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஒரு வருட உத்தரவாத காலம் முடிவு பெற்றுவிட்டது.

எனவே 23.11.2019 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியபடி, நான்கு மண்டல அலுவலகங்களிலும் மேற்படி

வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்குரூ.30.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்ட விபரப்படி திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வத்றகு 270 எண்ணம் மின்கலம் மூலம் இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நான்கு மண்டலங்களிலும் பொது சுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஒரு வருட உத்தரவாத காலம் முடிவு பெற்ற நிலையில் மேற்படி வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.30.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 61:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---